# தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்
# &
# இந்தியவானிலைத்துறை
## வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம், கோவை
## திருப்பூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
## (09.07.2022 முதல் 13.07.2022 )

***அறிக்கை எண் 054/2022*** ***தேதி.09.072022***

### மாநிலத்தின் கடந்தவார வானிலை

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 32°செ முதல் 37°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 22°செ முதல் 29°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 15°செ முதல் 20°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 10°செ முதல் 11°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஒரு சில இடங்களில் பரவலாக மழை பெறப்பட்டது.

### திருப்பூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

| கடந்தவார வானிலை (03.06.2022 முதல் 07.07.2022) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 13.07.2022- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 03/07 | 04/07 | 05/07 | 06/07 | 07/07 | தேதி | நாள் -1 09/07 | நாள்-2 10/07 | நாள்-3 11/07 | நாள்-4 12/07 | நாள்-5 13/07 |
| 0.8 | 0.2 | 0.4 | 0.5 | 0.0 | மழை (மி.மீ) | 10 | 8 | 6 | 6 | 10 |
| 33 | 30 | 31 | 29 | 29 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 32 | 32 | 32 | 32 | 32 |
| 23 | 22 | 22 | 22 | 22 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 23 | 23 | 23 | 23 | 23 |
| 7 | 7 | 7 | 7 | 7 | மேக மூட்டம் (ஆக்டா) | 6 | 6 | 6 | 6 | 6 |
| 91 | 77 | 90 | 82 | 90 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70 | 70 | 70 | 70 | 70 |
| 74 | 71 | 75 | 91 | 93 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 60 | 60 | 60 | 60 | 60 |
| 18 | 21 | 24 | 24 | 24 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 20 | 20 | 20 | 20 | 20 |
| 230 | 230 | 230 | 230 | 230 | காற்றுவீசும் திசை | 250 | 250 | 250 | 250 | 250 |

### எதிர்பார்க்கப்படும் வானிலை திருப்பூர் (09.07.2022 முதல் 13.07.2022)

வரும் நாட்களில் வானம் பெரும்பாலான மேக மூட்டத்துடன் காணப்படும். அடுத்து வரும் ஐந்து நாட்களுக்கு இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 32°செ ஆகவும், குறைந்த பட்ச வெப்பநிலை 23°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 70 சதவிகிதமாகவும், மாலைநேர

காற்றின் ஈரப்பதம் 60 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 20 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரை**

| | | |
|---|---|---|
| **பொது அறிவுரை** | | அடுத்த 5 நாட்களுக்கு லேசானது முதல் மிதமான மழை எதிர் பார்க்கப்படுபிறது. திருப்பூர் மாவட்டத்தில் காற்றின் வேகம் மணிக்கு 20 கி.மீ வேகத்தில் வீசும் என எதிர் பார்க்கப்படுவதால் வாழை மரங்களுக்கு போதிய பாதுகாப்பு செய்யவேண்டும்.<br>இறவை பயிர்களுக்கு மண் ஈரத்தினைப் பொறுத்து நீர் பாசனம் செய்ய வேண்டும்.<br>காற்றின் வெப்பநிலையும் கடந்த வாரத்தினை விட சற்று கூடுதலாக வாய்ப்புள்ளது. |
| பயறு | | இறவை மற்றும் மானாவாரியில் பயிரிடப்பட்ட பாசிப்பயறு மற்றும் உளுந்து பயிர்களில் ஒரு சதுர அடியில் 33 செடிகள் இருக்குமாறு பாடுவாசி விதைப்பு செய்ய வேண்டும். |
| மக்காச்சோளம் | விதைப்பு | எதிர்பார்க்கப்படும் மழையை பயன்படுத்தி, இறவை மக்காச்சோளம் மற்றும் சூரியகாந்தி நடவு செய்வதனை தொடர வேண்டும். |
| கரும்பு | வளர்பருவம் | கரும்பில் காய்ந்த தோகை உறிப்பது மற்றும் விட்டம் கட்டுவதன் மூலம் 150 நாட்கள் வயதுடைய முன் பருவ கரும்பில் துளைப்பான் பூச்சியின் தாக்கத்தை குறைக்க வேண்டும். |
| வாழை | | மழையுடன் காற்றின் வேகம் அதிகரிக்க வாய்ப்புள்ளதால் ஐந்து மாதங்களுக்கு மேலுள்ள வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்க வேண்டும். |
| தென்னை | | எதிர்பார்க்கப்படும் மழையினை பயன்படுத்தி தென்னை மரங்களுக்கு முதல் உரமாக மரம் ஒன்றிற்கு யூரியா 650 கிராம் சூப்பர் பாஸ்பேட் 1 கிலோ, பொட்டாஷ் 1 கிலோ மற்றும் வேப்பம்புண்ணாக்கு 2 கிலோவினை 50 கிலோ எருவுடன் கலந்து இட வேண்டும்.<br>குறும்பை உதிர்வதை தடுக்க ஒரு மரத்திற்கு 200 மிலி வீதம் TNAU தென்னை வளர்ச்சியூக்கியினை வேர்மூலம் அளிக்க வேண்டும்.<br>தென்னை மரங்களைச் சுற்றிலும் உள்நோக்கிய வட்டப்பாத்தி எடுப்பதால் மழைநீரினை வேர்ப்பகுதியில் சேமிக்க வேண்டும். |
| கால்நடைகள் | | மழையுடன் அதி வேகத்தில் காற்று எதிர்பார்க்கப்படுவதால் கால்நடைக்குடில்களுக்கு போதிய பாதுகாப்பு செய்யவேண்டும்.<br>காற்றின் வேகம் அதிகரித்து காணப்படுவதால் கோழிகளுக்கு போதிய அளவு நல்ல தண்ணீர் கொடுக்க வேண்டும். மேலும் தீவனம் காற்றில் சேதமடையாதவாறு கூடாரங்களில் காற்று வரும் திசையில் சாக்கு பையை தொங்கு விட வேண்டும்.<br>நிலவும் வானிலையில் கறவை மாடுகளில் மடி வீக்க நோய் தென்பட வாய்ப்புள்ளது. எனவே பால் கரக்கும் முன்னும் பின்னும் மடியை 1 சதம் பொட்டாஷியம் பெர்மாங்கனேட் கலவையில் நன்கு கழுவ வேண்டும். |

**குறுஞ்செய்தி**

- *மழையினை பயன்படுத்தி தென்னை மரம் ஒன்றிற்கு வேப்பம்புண்ணாக்கு 2 கிலோ, யூரியா 650 கிராம், சூப்பர் பாஸ்பேட் மற்றும் பொட்டாஷ் 1 கிலோவினை 50 கிலோ எருவுடன் கலந்து இட வேண்டும்.*

**முதன்மைஅலுவலர் (GKMS)**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை**